# ஊவா மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023

ஊவா மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை உடைய இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உடைய பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2023.09.18 ஆகும்.

## 01. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்:

1.1 விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.2 விண்ணப்பதாரர் ஊவா மாகாணத்தில் 03 வருடங்கள் நிரந்தர வதிவையுடைய பிரஜையாக இருத்தல் வேண்டும். (தொடர்ந்து 03 வருடங்களுக்கான வதிவை சான்றுப்படுத்தும் வாக்குரிமை பட்டியலின் பெயர்ப்பு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வதிவையுடைய தொடர்ச்சியான 03 வருடங்களுக்குள் ஊவா மாகாணத்திற்குள் நிரந்தர வதிவை உறுதி செய்ய இயலாத விண்ணப்பதாரிகள் ஊவா மாகாணத்திற்குள் தனது வாழ்க்கைத் துணையின் 03 வருட நிரந்தர வதிவை உறுதிப்படுத்த முடியும்.)

1.3 நன்னடத்தையுடன் மற்றும் நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

1.4 2023.09.18 திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## 02. கல்வி தகைமைகள்:

2.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.2.1 பந்தியின் 6 ஆம் குறிப்பிற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள அல்லது தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2. கற்பிக்கும் பணிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தனித்துவமான துறைகளுக்கான, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட (உள்நாட்டு/வெளிநாட்டு) பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டம் பெற்றுக்கொண்டிருக்க வேண்டியதுடன், அப்பட்டத்திற்காக கற்றுள்ள பிரதான விடயங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு விடயங்களுக்காக இவ் அறிவித்தலின் உப ஆவணத்தின் இலக்கம் 01ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

2.3. பட்டப்படிப்பிற்காக பின்பற்றியுள்ள பிரதான விடயம் / விடயங்களுக்கு ஏற்ப மாத்திரம் குறித்த ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்துள்ள விடயத்துடன் தொடர்புடையதாக அவரது பட்டப்படிப்பின் முழு விடய உள்ளடக்கத்தில் (Credit எண்ணிக்கையில்) 1/3 னை பூரணப்படுத்தியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

2.4. பட்டப்படிப்பின் விளக்கமான பெறுபேற்று ஆவணத்தில் விடயங்களின் உள்ளடக்கம் குறிப்பிடப்பட்டிக்கவில்லை எனின் அதனை குறித்த பல்கலைக்கழகத்தின் ஊடாக சான்றுப்படுத்தி குறித்த ஆவணத்தினை பொது நேர்முக பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

2.5. பட்டப்படிப்பின் விடய உள்ளடக்கம் தொடர்பாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் இறுதி தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

## 03. சேவை நிபந்தனைகள்:

3.1. இப்பதவி நிரந்தரமானது. பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

3.2. முதலாவதாக நியமிக்கப்படும் பாடசாலையில் 05 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டியதோடு எந்தவொரு காரணத்திற்காகவும் இடமாற்றம் அல்லது சேவை இணைப்பினை பெறுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

3.3. 05 வருட சேவை காலத்தின் பின்னர் ஊவா மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கையின் பிரகாரம் சேவை தேவையின் அடிப்படையில் ஊவா மாகாணத்தின் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்தருவதற்கு ஊவா மாகாண சபை கல்வி அமைச்சின் ஊடாக பரிசீலிக்கப்படும்.

3.4. அரசாங்க நியமனத்தினை நிருவகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1885/38 னை உடைய அதி விசேட வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாண குறிப்பில் மேற்கொண்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்படுதல் வேண்டும்.

3.5. பட்டதாரிகள் ஊவா மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, 2022.01.05 ஆம் திகதி பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016(iv) ன் GE-1-2016 – ஏ சம்பள பிரிவின் கீழ் ரூபா. 31,490/- 445×6-525×7-600×2-39,035/- மாதாந்த சம்பள அளவீட்டின் 14 வது சம்பள படியான ரூபா. 37,835/- சம்பளத்தில் நிலைப்படுத்தப்படுவர்.

## 04. ஆட்சேர்ப்பு செய்யும் முறை:

4.1. விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்காகவும் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஊடாக எழுத்து மூல பரீட்சை நடாத்தப்படும். ஆனால் ஒவ்வொரு விடயத்திலும் நிலவும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பரீட்சைக்கு அமர்த்துதல் அல்லது அமர்த்தாமை தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்ளுதல் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினை சார்ந்ததாகும். எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்தும் விண்ணப்பதாரிகள் முழு புள்ளிகளின் கூட்டுத்தொகையின் வரிசைகிரமப்படி குறித்த வெற்றிட எண்ணிக்கைக்கு மூன்று மடங்கு சமமான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை பொதுவான நேர்முகப் பரீட்சை மற்றும் கற்பித்தல் திறனை அளவிடுவதற்காக நடாத்தப்படும் பிரயோக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்து மூல பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைகிரமம் பிரகாரம் பாடசாலை அடிப்படையில் தகைமை வாய்தவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.2. பிரயோக பரீட்சை சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளுக்கு குறித்த வெற்றிட ஆவணமானது காட்சிப்படுத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகளினால் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்காக சுய விருப்ப முன்னுரிமை அடிப்படையில் தெரிவினை குறிப்பிடவேண்டும்.

4.3. எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்திய விண்ணப்பதாரர் ஒருவருக்கு பாடசாலை அடிப்படை முறையில் பாடசாலையொன்று கிடைக்கப்பெறவில்லை எனின் எழுத்து மூல பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் வரிசைகிரமம் பிரகாரம் பாடசாலை அடிப்படையில் எந்தவொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் செய்யாத வெற்றிட பாடசாலையொன்று ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பெற்றுத்தரப்படும்.

4.4. ஒரு பாடசாலைக்கு மாத்திரம் விருப்பினை தெரிவித்துள்ள விண்ணப்பதாரிகள் பலர் சமமான புள்ளியினை பெற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் பாடசாலைக்காக நிலைப்படுத்துதல் தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

4.5. இவ் அறிவித்தலிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சகல விண்ணப்பதாரருக்கும் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பின் 11.2 பந்தியின் பிரகாரம் 21 நாள் ஆரம்ப பயிற்சி (வதிவிட) பெற்றுத்தரப்படும்.

4.6. **பொது நேர்முக பரீட்சை:**
இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பு மற்றும் அதற்கு இணங்கியதாக வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளாரா என பரீட்சித்தல் மற்றும் உடல் மற்றும் உள தகுதியானது பரீட்சிக்கப்படும். நேர்முக பரீட்சைக்காக புள்ளிகள் பெற்றுத்தரப்படமாட்டாது.

4.7. **பிரயோக பரீட்சை:**
ஆசிரியர் தொழிலில் முக்கியமான கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கை தொடர்பாக விண்ணப்பதாரரின் திறமை அளவிடப்படும். இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாக கொண்டு இதற்காக புள்ளிகள் பெற்றுத்தரப்படும்.

4.8. அதேபோல இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படுமாயின் அவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள விதைப்புரைகளுக்கு அமைவானதாக காணப்படும்.

## 05. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

5.1. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படித்தில் ஒவ்வொரு தலைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்புதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 06 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டும்.

5.2. பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2023.09.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது மேல் மூலையில் **"ஊவா மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023"** எனவும் மற்றும் தாங்கள் விண்ணப்பிக்கும் விடயம் மற்றும் விடய இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடுதலும் வேண்டும்.

tamilguru.lk

5.3. தற்போது ஊவா மாகாண அரச சேவையில் அல்லது மத்திய அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்கள தலைவரின் ஊடாக முன்வைத்தல் வேண்டும்.

5.4. விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஒரு பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க இயலுவதோடு விண்ணப்பிக்கும் பாடத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. வெற்றிடப்பட்டியலிற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட இலக்கம், விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

5.5. ஒரு விண்ணப்பதாரரினால் ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே முன்வைக்க முடியும். ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுவதோடு, ஊவா மாகாணத்தில் உள்ள எந்தவொறு பாடசாலையிலும் கடமை புரிவதற்காக விண்ணப்பதாரர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

5.6. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத, பரீட்சை மற்றும் நிருவாக கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணணப்பப்படிவங்கள், முழுமையான தகவல்களை பூரணப்படுத்தாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தேவையான தகைமைகளை கொண்டிறாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை வலையத்தளத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கு ஏற்ப முன்வைத்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போகுதல் மற்றும் தாமதமாகுதல் தொடர்பில் முன்வைக்கப்படும் எந்தவொறு முறையீடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தில் நிழல்பட பிரதி ஒன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்மை பயப்பதாகும்.

5.7. **கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

**5.7.1. மாகாண அரசாங்க சேவையில்/ மத்திய அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்:-**
விண்ணப்பப்படிவத்திலும் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தினை தனது நிறுவன தலைவர் அல்லது நிறுவன தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**5.7.2. அரசாங்க சேவையாளர் அல்லாத விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்:-**
விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபரினால்/ பிரிவின் கிராம உத்தியோகத்தரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய பிரமாண ஆணையாளரினால்/ பொது நொதாரிசு ஒருவரினால்/ முப்படையின் அதிகாரம் உடைய உத்தியோகத்தரினால்/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியியில் உள்ள உத்தியோகத்தர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள ரூபா. 47,615/- அல்லது அதற்கு அதிகமாக மாதாந்த இணைந்த படியினை பெறும் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**06. பரீட்சை மற்றும் நிருவாக கட்டணம்:**

பரீட்சை கட்டணம் மற்றும் நிருவாக செலவீனம் ரூபா. 1,250/- ஆகும். இத்தொகையை **ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கக்கூடியவாறு ஊவா மாகாணத்தில் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும்** பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதன் ஒரு விளிம்பை விண்ணப்பத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு நன்றாக ஒட்ட வேண்டும். எதிர்கால தேவை கருதி இதன் நிழல்பட பிரதியினை தம்மிடம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரதேச செயலாளர் காரியாலயமொன்றில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், அவ்விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பித்தரவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றித்தரப்பட மாட்டாது.

## 07. பரீட்சை நடைமுறை மற்றும் போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு:

7.1. ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் தீர்மானத்தின் அடிப்படையில் அறிவித்தலின் வயது வரையறையினுள், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை செலுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஊவா மாகாண சபை ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும். தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத நபர் இருப்பின் அது தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவில் வினவல் செய்ய முடியும். அவ்வாறு வினவல் செய்யும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர் தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களை சான்றுப்படுத்துவதற்காக தன்னிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவு தபால் செய்யும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயாராக வைத்திருத்தல் பயனுடையதாகும்.

7.2. போட்டிப் பரீட்சை பதுளை நகரத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

7.3. விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் உட்படுதல் வேண்டும். அச்சட்டத்திட்டங்களை மீறினால் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அந்நபர் உள்ளாக்கப்படுவர்.

7.4. பரீட்சை தினத்தன்று அபேட்சகரின் ஆள் அடையாளத்தினை சான்றுபடுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகக்கூடிய கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் முன்வைக்க வேண்டும். இவ் ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.5. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் விண்ணப்பதாரி குறித்த பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் என்பதற்கான ஏற்புடமையாக கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பூரணப்படுத்தபடவில்லை என தெரியவந்தால் அவ்விண்ணபதாரி நியமனத்தினை பெறுவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

7.6. இப்போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலத்தில் நடாத்தப்படும். அபேட்சகர் ஒருவர் சகல பரீட்சைகளுக்கும் ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்ததன் பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.7. எழுத்து மூல போட்டிப் பரீட்சையானது பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதிலுடன் கூடியதாக கீழ்வரும் வினாப்பத்திரம் 02 உடன் கூடியதாக காணப்படும். சகல அபேட்சகர்களும் வினாப்பத்திரம் இரண்டிற்கும் (02) தோற்ற வேண்டும்.

**01. நுண்ணறிவு - காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்**

அபேட்சகரிடம் காணப்படும் ஆசிரியர் தொழிலிற்கான திறன், தர்க்கரீதியான அறிவை அளவிடுவதனை நோக்கமாக கொண்டு இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாள் பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதில் வினாக்கள் 50 ன் கூடியதாகும். அவ்வினாக்கள் சகலவற்றிற்கும் விடையளிக்க வேண்டும்.

**02. பொது அறிவு - காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்**

ஆசிரியர் தொழில் தொடர்பான பொது அறிவு, தேசிய ரீதியில் இடம்பெற்றிருக்கும் மற்றும் இடம்பெறும் கல்வி முன்னேற்றம் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி புத்தாக்கம் தொடர்பான பொது அறிவை பரிசீலனை செய்யும் பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதில் வினாக்களுடன் கூடியதாகும். அவ்வினாக்கள் சகலவற்றிற்கும் விடையளிக்க வேண்டும்.

போட்டிப் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொறு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தப்பட்சம் 40% புள்ளிகளை அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7.8. **பிரயோக பரீட்சை:** காலம் - 5 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்
- அதிகப்பட்ச புள்ளிகள் 25

விண்ணபதாரரினால் நியமனம் பெற்றுக்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கும் பாடம் தொடர்பாக கண்டறியப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்பினை மேற்கொள்ள வேண்டும். இதற்காக கீழே தரப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். இப்பரீட்சை ஊவா மாகாண சபையினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையினால் மேற்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | பிரயோக பரீட்சையில் புள்ளிகள் பெற்றுத்தரப்படும் அளவுக்கோல்கள் | அளவுக்கோல்களின் நோக்கம் | உயர்ந்தப்பட்ச புள்ளிகள் | தேர்ச்சிப் பெறுவதற்கு தேவையான குறைந்தப்பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் அணுகல் தன்மை | வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளங்கப்படுத்துதல் மற்றும் பாடத்திற்கு அணுகும் திறமையினை மதிப்பிடுதல் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் நிருவாகம் | ஆசிரியராக நல்ல ஆளுமையுடன் இருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சரியான முறையில் குரலை நிருவகித்தல் திறனை மதிப்பிடுதல் | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | கற்றல்/கற்பித்தல் செயற்பாடுகளில் தேவையான விடயங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக தொடர்பாடல் செய்வதற்கான திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | பெற்றுத்தரப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை அடைவதற்கான திறமையினை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 05 | சமர்ப்பித்தல் முறையில் நுட்பங்களின் பாவனை | நோக்கத்தினை அடைவதற்காக சமர்ப்பிப்பதற்கான நுட்ப முறையினை சரியாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| **மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை** | | | **25** | **10** |

- பிரயோக பரீட்சையில் தேர்ச்சி அடைவதற்காக ஒவ்வொறு அளவுகோலிற்காகவும் குறைந்தபட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

08. நேர்முக பரீட்சைக்காக குறித்த தினத்தன்று பங்குபற்றாத விண்ணப்பதாரர்கள் எந்தவொறு வகையிலும் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

09. அதேபோல் நேர்முகப் பரீட்சை தினத்தன்று சகல சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டியதுடன் பின்னர் முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**10. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சையில் தோற்றுவதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்பத்திலும் அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படக்கூடும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என தெரியவந்தால் அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரின் சேவையானது முடிவுறுத்தப்படும்.

11. இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்/ ஆட்சேர்ப்பு செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல்/தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

12. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் பொருத்தமின்மை காணப்படுமாயின் அல்லது முரண்பாடு இருப்பதாக தெரியவந்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

tamilguru.lk

## உப ஆவண இலக்கம் 01 - விடய வெற்றிட விபரம்

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 1 | இரசாயண விஞ்ஞானம் | நான்கு வருட விசேட பட்டத்தின் பிரதான விடயமாக<br>அல்லது<br>ஏனைய விடயமாக பட்டத்தின் முழு பாடவிதானத்தின் 1/3 பகுதி க.பொ.த. (உயர் தரம்) பாடவிதானத்திற்கு ஏற்றாற் போல தகைமையினை கொண்டிருத்தல்.<br>அல்லது<br>மூன்று வருட பட்டத்தின் போது முழு பாடவிதானத்தில் 1/3 பகுதி குறைந்தப்பட்சமாக குறித்த விடயத்தில் பூரணப்படுத்தியுள்ளமை. | 10 | 02 |
| 2 | பௌதீக விஞ்ஞானம் | நான்கு வருட விசேட பட்டத்தின் பிரதான விடயமாக<br>அல்லது<br>ஏனைய விடயமாக பட்டத்தின் முழு பாடவிதானத்தின் 1/3 பகுதி க.பொ.த. (உயர் தரம்) பாடவிதானத்திற்கு ஏற்றாற் போல தகைமையினை கொண்டிருத்தல்.<br>அல்லது<br>மூன்று வருட பட்டத்தின் போது முழு பாடவிதானத்தில் 1/3 பகுதி குறைந்தப்பட்சமாக குறித்த விடயத்தில் பூரணப்படுத்தியுள்ளமை. | 11 | 01 |
| 3 | உயிர் விஞ்ஞானம் | நான்கு வருட விசேட பட்டத்தின் பிரதான விடயமாக தாவரவியல் அல்லது தாவர உயிரியல் விஞ்ஞானம் அல்லது விலங்கியலினை பின்பற்றி உள்ளமை மற்றும் பிரதான விடயமாக தாவரவியல் அல்லது தாவர உயிரியல் விஞ்ஞானமாக இருக்கும் போது ஏனைய விடயங்களாக விலங்கியலும், பிரதான விடயம் விலங்கியலாக இருக்கும் போது ஏனைய விடயமாக தாவரவியல் அல்லது தாவர உயிரியலும் குறைந்தபட்சம் இரண்டு வருடங்களிலேனும் உயர்தர பாடவிதானத்திற்கு ஏற்ப பின்பற்றி இருத்தல்.<br>அல்லது<br>மூன்று வருடத்திற்கு சமனான பட்டத்தில் தாவரவியல் அல்லது தாவர உயிரியல் மற்றும் விலங்கியல் ஆகிய விடயங்கள் இரண்டினதும் எண்ணிக்கை, முழு பாடவிதானத்தின் குறைந்தப்பட்சம் 1/3 பகுதியினை உயர்தர பாடவிதானத்திற்கு ஏற்ப பின்பற்றியிருத்தல். | 12 | 01 |
| 4 | விவசாய விஞ்ஞானம் | விஞ்ஞானமானி விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பட்டம்,<br>விஞ்ஞானமானி விவசாய பட்டம்,<br>விஞ்ஞானமானி விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பட்டம்,<br>விஞ்ஞானமானி விவசாய வியாபார முகாமைத்துவ பட்டம்,<br>விஞ்ஞானமானி ஏற்றுமதி விவசாய பட்டம்<br><br>மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டம்<br>அல்லது<br>உயர்தர விவசாய விடயத்திற்கு ஏற்றவாறு முழு பாடவிதானத்தில் 1/3 பகுதியை உள்ளடக்கிய விடயங்களுடன் கூடிய எந்தவொரு விஞ்ஞானமானி பட்டத்தினை பின்பற்றியுள்ளமை. | 04 | 01 |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 5 | இணைந்த கணிதம் | நான்கு வருட விசேட பட்டதின் பிரதான விடயமாக வியாபார கணிதம் மற்றும் தூய கணிதத்தை பின்பற்றி இருத்தல் மற்றும் பிரதான விடயம் வியாபார கணிதமாக இருக்கும் போது ஏனைய விடயமாக தூய கணிதமும், பிரதான விடயம் தூய கணிதமாகும் போது ஏனைய விடயமாக வியாபார கணிதமும் குறைந்தப்பட்சமாக இரண்டு வருடங்களிலேனும் பின்பற்றி இருத்தல்.<br>அல்லது<br>மூன்று வருடத்திற்கு சமனான பட்டத்தில் வியாபார கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய விடயங்கள் இரண்டினதும் எண்ணிக்கை, முழு பாடவிதானத்தின் குறைந்தப்பட்சம் 1/3 பகுதியினை பின்பற்றியிருத்தல். | 12 | 02 |
| 6 | பொறியியல் தொழில்நுட்பம் | பட்டத்தின் போது முழு பாடவிதானத்தில் 1/3 பகுதி உள்ளடங்களாக கட்டுமானம், இயந்திரம், மின்சாரம் அல்லது இலத்திரனியல் ஆகிய விடயங்கள் உள்ளடங்களாக பட்டத்தை பூரணப்படுத்தியுள்ளமை.<br>அல்லது<br>பொறியியல் பட்டம் (கட்டுமானம், இயந்திரம், மின்சாரம் மற்றும் ∴ அல்லது இலத்திரனியல்) பெற்றிறுத்தல் | 06 | - |
| 7 | உயிர் முறைமை தொழில்நுட்பவியல் | விஞ்ஞானமானி விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பட்டம்,<br>விஞ்ஞானமானி விவசாய பட்டம்,<br>விஞ்ஞானமானி விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பட்டம்,<br>உயிர் முறைமை தொழில்நுட்பவியல் பட்டம்,<br><br>மேலே பெயரிடப்பட்டுள்ள பட்டம்<br>அல்லது<br>உயர்தர உயிர் முறைமை தொழில்நுட்ப விடயத்திற்கு ஏற்றவாறு முழு பாடவிதானத்தில் 1/3 பகுதியை உள்ளடக்கிய விடயங்களுடன் கூடிய எந்தவொரு விஞ்ஞானமானி பட்டத்தினை பின்பற்றியுள்ளமை. | 04 | - |
| 8 | விஞ்ஞான தொழில்நுட்பவியல் | விஞ்ஞானமானி பட்டத்தின் முழு பாடவிதானத்தின் 1/3 பௌதீக விஞ்ஞானம் உள்ளடங்குமாறு பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல். | 06 | - |
| 9 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பட்டம்<br>அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டமானது பட்டத்திற்கான முழு பாடவிதானத்தின் 1/3 பகுதி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயத்திற்கு சார்ந்ததாக இருக்க வேண்டும். | 02 | - |
| 10 | சிறுவர் மனோதத்துவ மற்றும் பாதுகாப்பு | சிறுவர் மனோதத்துவ விஞ்ஞானத்தினை ஒரு விடயமாக கொண்டுள்ள பட்டம்<br>அல்லது<br>சிறுவர் மனோதத்துவ மற்றும் பாதுகாப்பினை பிரதான விடயமாக கொண்டு தொடர்ந்நுள்ள பட்டமொன்றினை பெற்றருத்தல். | 01 | 01 |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 11 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | சுகாதார மேம்பாட்டு விஞ்ஞானமானி (விசேட) பட்டம்.<br>அல்லது<br>சகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பினை பிரதான விடயமாக கொண்ட பட்டத்தினை பெற்றிருத்தல். | 01 | 01 |
| 12 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு | விஞ்ஞானமானி (உடற் கல்வி) விசேட பட்டம்<br>அல்லது<br>விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>உடற்கல்வி மற்றும் விளையாட்டினை பிரதான விடயமாக கொண்ட பட்டத்தினை பெற்றிருத்தல். | 02 | - |
| 13 | கைவினை | காட்சி கலைகள் விசேட பட்டம் (சித்திரம், சிலை, அச்சுக் கலை, நெசவு மற்றும் நெசவு தொடர்பான கலை ஆகியன).<br>அல்லது<br>காட்சி கலைகள் மற்றும் முகாமைத்துவ விசேட பட்டம் (சித்திரம் மற்றும் வரைகலை)<br>அல்லது<br>காட்சி மற்றும் தொழில்நுட்ப கலைகள் விசேட பட்டம்<br>அல்லது<br>கலைமானி அல்லது நுண்கலை விசேட பட்டத்தினை பெற்றிருத்தல் (சித்திரம்/ வரைகலை/ சிலை/ காட்சி மற்றும் தொழில்நுட்ப கலை ஆகிய விடயங்கள் மற்றும் ஒரு விடயத்தேயேனும் பிரதானமாக பின்பற்றி இருத்தல் வேண்டும்). | 01 | 01 |
| 14 | உள்ளக வடிவமைப்பு | வீட்டு வடிவமைப்பு கலைக்கான விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>வடிவமைப்பியல் பட்டம்.<br>அல்லது<br>வீட்டு வடிவமைப்பு கலைக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பட்டம்.<br>அல்லது<br>உள்ளக வடிவமைப்பியலை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டத்தினை பெற்றிருத்தல். | 02 | - |
| 15 | வரைகலை வடிவமைப்பியல் | வடிவமைப்பியல் பட்டம்.<br>அல்லது<br>காட்சி கலை மற்றும் திட்டமிடல் தொடர்பான கலைமானி பட்டம் (சித்திரம் மற்றும் வரைகலை)<br>அல்லது<br>கணனி பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>கணனி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம்<br>அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமானி விசேட பட்டம்<br>அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டம்.<br>அல்லது<br>பட்டத்திற்கான பிரதான விடயமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்கள் உள்ளடக்கப்பட்ட பட்டம்.<br>அல்லது<br>கணனி விஞ்ஞான விடயம் உள்ளக்கப்பட்ட விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>(மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்படிபின் முழு பாடவிதானத்தின் 1/3 பங்கு வரைகலை வடிவமைப்பு தொடர்பான விடயங்களுடன் பின்பற்றி சித்திபெற்றிருத்தல்.)<br>வரைகலை வடிவமைபியலினை பிரதான விடயமாக கொண்ட பட்டத்தினை பின்பற்றியிருத்தல்). | 01 | - |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 16 | நிலப்பரப்பு வடிவமைப்பு | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பூந்தோட்ட விஞ்ஞானம்/நிலப்பரப்பு வடிவமைப்பு விடயங்களை பின்பற்றியுள்ளமை.<br>அல்லது<br>நிலப்பரப்பு வடிவமைப்பு பிரதான விடயமாக பின்பற்றியுள்ள எந்தவொறு விஞ்ஞானமானி பட்டத்தினையும் பெற்றிருத்தல். | 02 | - |
| 17 | வியாபார பூந்தோட்ட விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்தில் பூந்தோட்ட விஞ்ஞானம்/ நிலப்பரப்பு வடிவமைப்பு விடயத்தினை பின்பற்றியுள்ளமை.<br>அல்லது<br>வியாபார பூந்தோட்ட விஞ்ஞானத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள எந்தவொறு விஞ்ஞானமானி பட்டத்தினையும் பெற்றிருத்தல். | 01 | - |
| 18 | மிருக வள உற்பத்தி தொழில்நுட்ப கல்வி | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் மிருக விஞ்ஞானம்/ மிருக வள உற்பத்தி தொழில்நுட்பம் விசேடமாக உள்ளடக்கப்பட்டு பின்பற்றியிருத்தல்.<br>அல்லது<br>கால்நடை முகாமை மற்றும் மீன் விஞ்ஞானம் தொடர்பான பட்டம்.<br>அல்லது<br>கால்நடை உற்பத்தி மற்றும் உணவு தொழில்நுட்பம்/ மிருக வள உற்பத்தி தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள எந்தவொறு விஞ்ஞானமானி பட்டத்தினை பெற்றிருத்தல். | 02 | - |
| 19 | உணவு உற்பத்தி தொழில்நுட்ப கல்வி | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பட்டம்.<br>அல்லது<br>உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு தொடர்பான விஞ்ஞானம்<br>அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்தில் உணவு விஞ்ஞானம்/ உணவு உற்பத்தி தொழில்நுட்பத்தை விசேடமாக உள்ளடக்கப்பட்டு பின்பற்றியுள்ளமை.<br>அல்லது<br>உணவு உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் உணவு தயாரித்தல் தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக கொண்டுள்ள எந்தவொறு விஞ்ஞானமானி பட்த்தினை பெற்றிருத்தல். | 02 | 01 |
| 20 | நீர்வாழ் வள தொழில்நுட்ப கல்வி | நீர்வாழ் வள முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்தில் கால்நடை விஞ்ஞானம்/ மிருக வள உற்பத்தி தொழில்நுட்பம்/நீர்வாழ் வள தொழில்நுட்பத்தினை விடயமாக பின்பற்றியுள்ளமை.<br>அல்லது<br>கால்நடை முகாமை மற்றும் மீன் விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>மீன்பிடி மற்றும் சமூத்திர விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம்.<br>அல்லது<br>நீர்வாழ் வள தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக கொண்ட எந்தவொரு விஞ்ஞானமானி பட்டதினை பெற்றிருத்தல். | 01 | - |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 21 | பெருந்தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்ப கல்வி | ஏற்றுமதி விவசாயம் தொடர்பான பட்டம்.<br>அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டத்தில் பெருந்தோட்ட பயிர்/பெருந்தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்பத்தினை ஒரு விடயமாக பின்பற்றியுள்ளமை.<br>அல்லது<br>பெருந்தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்பத்தினை விடயமாக பின்பற்றியுள்ள எந்தவொரு விஞ்ஞானமானி பட்டத்தினை பெற்றிருத்தல். | 03 | - |
| 22 | மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி | தொழில்நுட்பவியல் பட்டம் (மோட்டார் இயந்திரம்)<br>அல்லது<br>விஞ்ஞானமானி பொறியியலாளர் (மோட்டார் இயந்திர) பட்டம்.<br>அல்லது<br>மோட்டார் இயந்திர தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக கொண்ட பட்டத்தினை பெற்றிருத்தல். | 03 | - |
| 23 | கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | கட்டிட பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம்<br>அல்லது<br>கட்டுமானம் மற்றும் கட்டிட சேவை தொழில்நுட்பவியல் உள்ளடங்கிய பொறியியல் தொழில்நுட்பவியல் பட்டம்.<br>அல்லது<br>தொழில்நுட்பவியல் பட்டம்<br>அல்லது<br>கட்டுமான தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றிய வேறு எந்தவொறு பட்டம்.<br>அல்லது<br>ஏதேனும் பட்டத்துடன் 02 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான கற்கைநெறி காலத்துடன் கூடிய அல்லது குறைந்தது ஏஞு 4 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி தொடர்பான டிப்ளோமாவினை பெற்றிருத்தல். | 02 | - |
| 24 | மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | மின் தொழில்நுட்ப கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞான பட்டம்.<br>அல்லது<br>பொறியியல் தொழில்நுட்ப பட்டம்<br>அல்லது<br>வியாபார இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம்.<br>அல்லது<br>மின்சாரம் அல்லது இலத்திரனியல் தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டத்தினை பெற்றிருத்தல். | 02 | - |
| 25 | நெசவு மற்றும் ஆடை தொழில்நுட்பக் கல்வி | வடிவமைப்பியல் பட்டம்<br>அல்லது<br>நெசவு மற்றும் ஆடை தொடர்பான பொறியியல் விஞ்ஞான முதன்மை பட்டம்<br>அல்லது<br>தொழில்நுட்பவியல் பட்டம்<br>அல்லது<br>நெசவு மற்றும் ஆடை தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டத்தினை பெற்றிருத்தல். | 03 | - |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 26 | உலோக அமைப்பு தொழில்நுட்பக் கல்வி | தொழில்நுட்பவியல் பட்டம் (இயந்திரவியல்)<br>அல்லது<br>இயந்திர தொழில்நுட்பவியலினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பொதுவான பட்டம்<br>அல்லது<br>உலோக அமைப்பு தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டம்.<br>அல்லது<br>எந்தவொரு பட்டத்துடனும் குறைந்தது NVQ 3 அல்லது அதற்கு மேலான மட்டத்திலான உலோக அமைப்பு தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவினை பின்பற்றியுள்ளமை. | 01 | - |
| 27 | அலுமினியம் செயலாக்க தொழில்நுட்பக் கல்வி | தொழில்நுட்பவியல் பட்டம் (கட்டிட/ கட்டுமானம்/ இயந்திரவியல்)<br>அல்லது<br>அலுமினியம் செயலாக்க தொழில்நுட்பவியலினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டம்<br>அல்லது<br>எந்தவொரு பட்டத்துடனும் குறைந்தது NVQ 3 அல்லது அதற்கு மேலான மட்டத்திலான அலுமினியம் செயலாக்க தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவினை பின்பற்றியுள்ளமை. | 02 | - |
| 28 | கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | மூன்று வருட பாடநெறி காலத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்ப, கணனி விஞ்ஞானம்/ கணனி பொறியியல் விஞ்ஞானம் ௌதடர்பான பட்டம் (அப்பட்டபடிபிற்காக பாடவிதானத்திற்கு ஏற்ப விடயங்களில் பகுதியை பின்பற்றியிருத்தல்)<br>அல்லது<br>நான்கு வருட காலத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பம், கணனி விஞ்ஞானம்/கணனி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (அப்பட்டபடிபிற்காக பாடவிதானத்திற்கு ஏற்ப விடயங்களில் பகுதியை பின்பற்றியிருத்தல்)<br>அல்லது<br>கணனி விஞ்ஞானத்தினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள விஞ்ஞானமானி/ தொழில்நுட்பவியல் பட்டத்தினை பெற்றிருத்தல் மற்றும் முழு பாடவிதானத்தில் 1/3 பகுதியை உள்ளடக்கியதாக கீழே காணப்படும் விடயங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>விடயங்கள்:<br>I. Computer Harware<br>II. Computer System Engineering<br>III. Computer Networks<br>IV. Computer Achitecture<br>V. Operating System<br>VI. Electronics<br>VII. Arduino Technology<br>VIII. IT Security<br>IX. Nertwork Security<br>X. Information Security<br>XI. Cyber Security<br>XII. Computer Hardware and Network Related Projects | 02 | - |

| விடய குறியீட்டு இலக்கம் | விடயம் | தகைமைகள் | மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் |
| 29 | உற்பத்தி | மூன்று வருட காலத்துடன் கூடிய இயந்திர விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றினை பெற்றிருத்தல். | 01 | - |
| 30 | பயணம் மற்றும் விருந்தோம்பல் | விஞ்ஞானமானி சுற்றுலா முகாமைத்துவ விசேட பட்டம்.<br>அல்லது<br>விஞ்ஞானமானி பராமரிப்பு சேவை முகாமைத்துவ விசேட பட்டம்.<br>அல்லது<br>விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகத்துவ பட்டம்.<br>அல்லது<br>விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா வியாபார நிகழ்வு முகாமைத்துவ பட்டம்.<br>அல்லது<br>சுற்றுலா முகாமைத்துவ விசேட பட்டம்.<br>அல்லது<br>சுற்றுலா முகாமைத்துவ பட்டம்.<br>அல்லது<br>சுற்றலா மற்றும் கலாச்சார வள முகாமைத்துவ பட்டம்.<br>அல்லது<br>சுற்றலா மற்றும் விருந்தோம்பலினை பிரதான விடயமாக பின்பற்றியுள்ள பட்டத்தினை பெற்றிருத்தல். | 03 | - |
| 31 | விசேட கல்வி | விசேட கல்வி தொடர்பான பட்டம்<br>அல்லது<br>ஊடாடும் கல்வி தொடர்பான பட்டம்.<br>அல்லது<br>பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞான தொடர்பான விஞ்ஞானமானி பட்டத்தினை பெற்றிருத்தல். | 36 | 06 |
| **கூட்டுத்தொகை** | | | **141** | **17** |

ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

(எச்.எம். ஜீவந்த ஹேரத்)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2023.08.29ம் திகதி
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
இல. 14/4, பீலிபொதகமை வீதி,
பிங்கராவை, பதுளை.

tamilguru.lk